

திருச்சி மாவட்டம் துறையூர் ஒன்றியத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் துறையூரில் ரூ108.90 கோடி மதிப்பீட்டில் அமைய உள்ள கூட்டுக் குடிநீர் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தியாகராஜன், ஸ்டாலின் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், அறங்காவல் குழு தலைவர் முரளி, ஒன்றியச் செயலாளர் அண்ணாதுரை, நகர்மன்றத் தலைவர் செல்வராணி, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் ஆறுமுகம், எழிலரசன், நகராட்சி ஆணையர் ராமர் மற்றும் சரவணன், வீரபத்திரன், சரண்யா, மோகன், தாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

### வேளாண் அறிவியலாளர்

# எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை!

சென்னை, செப்.30 -

வேளாண் அறிவியலாளர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பசிப்பிணி ஒழிப்பு உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும்பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ் சுவாமிநாதன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன் அவர்கள் உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார். சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசண், பத்ம விபூசண் உள்ளிட்ட பல்வேறு உயரிய விருதுகளை சுவாமிநாதன் அவர்கள் பெற்றுள்ளார்.

உலகம் போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத் துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதன் அவர்களை கௌரவிக்கும் விதமாக அன்னாருக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### தஞ்சை மாவட்ட ‘சத்யம்’ தொலைக்காட்சி

# செய்தியாளர் அலெக்ஸாண்டர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 30 -

தஞ்சை மாவட்ட சத்யம் டி.வி. செய்தியாளர் அலெக்ஸாண்டர் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

சத்யம் டிவி தஞ்சாவூர் மாவட்ட செய்தியாளராக 12 ஆண்டுகளாக பணியாற்றியும், ஊடகத் துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவருமான அலெக்ஸாண்டர் அவர்கள் (வயது 46), நேற்று (28.09.2023) உடல்நலக்குறைவால் உயிரிழந்தார் என்பதை அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்.

அலெக்ஸாண்டர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஊடகத் துறை நண்பர்களுக்கும் இத்துயர்மிகு நேரத்தில் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### செஞ்சி ஒன்றியம் கெங்கவரம், கல்லேரி ஊராட்சிகளில்

# ரூ.38 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி!

## மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி செப். 30 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கெங்கவரம் மற்றும் கல்லேரி ஆகிய ஊராட்சிகளில் ஜல்ஜீவன் இயக்கம் சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ் தலா60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூபாய் 38 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு அதன் சிறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர்கள் சத்யா கார்த்திகேயன், ஞானாம்பாள் பஞ்சமூர்த்தி ஆகியோர் முன்னிலைவகித்தனர். ஊராட்சி மன்றத் தலைவர்கள் மகேஸ்வரி பொற்செழியன், பிரான்சிஸ்கா மேரிஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கெங்கவரம் ஊராட்சியில் 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கல்லேரி ஊராட்சியில் 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு மேல்நிலை நீர்த்தக தொட்டிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களை மையப்படுத்தி பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் கிராமத்தில் வாழும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் தொலைநோக்கு சிந்தனையுடன் முதலமைச்சர் உத்தரவிட்டதின் பேரில் இதுபோன்ற புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு மக்கள் பண்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் ஒரு சொட்டு தண்ணீர் கூட வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். நீர் ஆதாரத்தை பாதுகாக்க வேண்டும். தற்போது மழைக் காலம் என்பதால் இதை சரியான முறையில் பயன்படுத்தி நீரை சேகரித்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு பலன் அடைய அனைவரும்உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஊராட்சி மன்ற சங்க தலைவர் ரவி,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் குமார், சக்திவேல், அலெக்சாண்டர்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி தங்கதுரை, ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் தமிழ்ச்செல்வி சிவகுமார், விஜயகுமார், நிர்வாகிகள் அன்பழகன், கணேசன், டீக்கடை ரமேஷ் ,சங்கர், இளைஞரணி அன்பரசன், ராமதாஸ், குமரகுரு, ,சரவணன், ரஜினி, முருகன், ஏழுமலை, கல்லேரி விக்டர் ,வேலாயுதம், பழனி, ராதா, வனத்தையன் ,செஞ்சி கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பழனி, செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர், அரியலூர், திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய மாவட்டங்களுக்கான மருத்துவ அணி ஆலோசனைக் கூட்டம், பெரம்பலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், மாநில மருத்துவ அணி தலைவர் மருத்துவர் கனிமொழி சோமு தலைமையில் நடைபெற்றது . மாநில மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் ந.எழிலன்.எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் பலர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிழக்குறிச்சி, சோழமாதேவி, நவல்பட்டு, குண்டூர், கும்பக்குடி, காந்தளூர், பழங்கனாங்குடி, அசூர், சூரியூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் 32 இடங்களில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும் – மாவட்டச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கலைஞரின் நூற்றாண்டு விழா கல்வெட்டைத் திறந்து வைத்து கட்சிக் கொடியை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கினார். இந்த விழாவில் தெற்கு ஒன்றியச் செயலாளர் கங்காதரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லபாண்டியன் தலைமை! மாரிமுத்து வரவேற்பு!

# புதுக்கோட்டை அன்னவாசலில் பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சி.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, செப். 30-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்

நூற்றாண்டு விழா மற்றும் கழகத் தலைவர் தளபதி அவர்களிடம் சிறந்த பேரூர் கழக செயலாளர் விருது பெற்ற இலுப்பூர் பேரூர் கழக செயலாளர் வை.விஜயகுமார் அவர்களுக்கு பாராட்டுவிழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (30.09.2023 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் கண்ணார் தெரு, பேருந்து நிலையம் எதிரில் இலுப்பூரில், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

அன்னவாசல் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து வரவேற்புரையாற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி. தமிழக சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். கூட்டத்திற்கு தென்னலூர் எம்.பழனியப்பன், கே.எஸ்.சந்திரன், கே.ஆர்.என்.போஸ், கீரை. தமிழ்ராஜா, எம்.செந்தில்குமார், டி.ஆர்.ஆர்.ரெங்கராஜ், எம்.சிவக்குமார், கா. இளவரசன்,பொன்.பாரி வள்ளல், எம்.எஸ்.ஏ. முகம்மது ரீஷா, பி.மாரிமுத்து, பி.வி.எஸ்.பாண்டியன் கார்த்திக், பாக்கியராஜ், வனிதா போஸ், விஜ யக்குமார், என்.எஸ்.பன்னீர் செல்வம், சி.எஸ்.கே.மதியழகன், கல்யாணி மாரிமுத்து, இராஜேஸ்வரி செந்தில்குமார், கை.பழ னிச்சாமி, பொன்.தீத்தப்பன், பி.இராசப்பன், அ.கண்ண தாசன், டி.கணேசன், எம். பி.எம்.சின்ன தம்பி, ஜெயராமன்,கே.ஆர்.பி.ஜெயச்சந்திரன், சகுந்தலா வைரவன், அண்ணாத்துரை, செல்வக்குமார், ராஜேந்திரன், ஆர்.இளமாறன், ராமச்சந்திரன், ஆர். கோவிந்தராஜ், எஸ்.ஏ. சொக்கலிங்கம், கே.பி.எஸ். வேலுச்சாமி, எம்.வேலு, பி.சண்முகம், சுப்பிரமணியன், பி.சுப்பிரமணி, குமாரசாமி, சி.ராமச்சந்திரன், கே.சண்முகம், எம்.சுப்பையா, வெள்ளைச்சாமி எம்.பி.எஸ்.பொன்னுச்சாமி, எஸ்.தமிழினியன், ஆர், ஆர்.எஸ்.எம்.சுரேந்தர், டி.கணேசன், கணேசமூர்த்தி, ஆரோக்கியசாமி, மாரிக்கண்ணு, வடிவேல், மாரிமுத்து, எஸ்.டி.சேவியர், ஏ.முகம்மது ரபீக், ஆர்.பாலசுப்பிரமணியன், ஏ.ராஜ் முகம்மது, கருப்பையா, ஏ.எம்.பிரேம்குமார், எம்.டி.எஸ்.ரமேஷ், வி.ரவிச்சந்திரன், செ.பூபதி, எம்.வி.முருகேசன், எம். அப்துல் ரஷாக், கே.தங்கராஜ், கே.சேட்டு முகம்மது, ஜி.மாதவி, ஆரோக்கியம், ஆர்.திருமுருகன், சி.பன்னீர்செல்வம், வேலுச்சாமி, கே.எம்.எப். ரபீக், கணேசன், பாலு, பால்ராஜ், செல்லத்துரை, எம்.ராஜேஷ் சரோஜா நவநீதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு , கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, பி.டி. அரசகுமார், அரு.வீரமணி, வி.என்.மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, எம்.எஸ். அசோக்பாண்டியன், ஆ.செந்தில், க.மதியழகன்,

எஸ்.எஸ்.கருப்பையா,

பெ.ராஜேஸ்வரி, எம். லியாகத் அலி, மு.பி.மணி, சு.சண்முகம்,

ஜெயலெட்சுமி தமிழ்ச் செல்வன், தவ.பாஞ்சாலன் . திலகவதி செந்தில், காமு. மு.பி.மணி, க.நைனா முகமது, என்.சேட்டு, மு.பி.ம. சத்தியசீலன், அ.இளங்குமரன். கே.பி.அய்யப்பன் மு.க.ராமகிருஷ்ணன் வே.முத்துகிருஷ்ணன், சி.சண்முகம், மா.தமிழ் அய்யா, ஓ.எஸ்.வெங்கடாசலம், எம்.பரமசிவம், ஆர். சாமிநாதன், உ.முருகசன், பி.அண்ணாத்துரை, என். சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, சி.ஆர், வி.சித்ரா, க.ரெங்கராஜ், வை.கோ.ராஜன் மு.கலியமூர்த்தி, பூவை. காசிநாதன். ராப்பூசல் கருப்பையா. உரக்கடை எம்.கருப்பையா, டாக்டர் சி.குறிஞ்சிவாணன். கே.எஸ்.ச.இளையசூரியன் டி.ஆர்.ராமசாமி, டி.சூசைராஜ், எம்.சுப்பையா. மஜீத் முபாரக், டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், டி.எம். ஆர்.ராமமூர்த்தி, எம். ராஜா, அ.பிரபா, வி.ஜி. ஆர்.மணிவண்ணன் வே.ராஜேஸ், வி.என்.எம். பாலு, தபசு மணி முருகேசன், செந்தாமரை பாலு, கவிவேந்தன், என். வீரய்யா, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர். கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர். முடிவில் இலுப்பூர் பேரூராட்சி துணைத் தலைவர் இ.செந்தில்ராஜா நன்றி கூறுகிறார்.

### ரூ.9.36 கோடி மதிப்பில்

# பெரம்பலூர் மாவட்டத்தில் - 12 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,செப், 30 -

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.9.36 கோடி மதிப்பீட்டில் 12 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள்மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில்,ஜெயங்கொண்டம்சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள், கிராமசாலைகள்உள்ளிட்டவைகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின்சார்பில்12புதியவளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன்படி ஜெயங்கொண்டம் ஒன்றியம், வளவெட்டிகுப்பம் ஊராட்சியில் ரூ.151.05 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின்கிராமசாலைமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருச்சி சிதம்பரம்சாலைமுதல்வளவெட்டிகுப்பம் வரை 0/0 2/250 சாலை அமைக்கும்பணியினையும், பின்னர், சோழன்குறிச்சி ஊராட்சியில் ரூ.34.03 இலட்சம் மதிப்பீட்டில்முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சோழன்குறிச்சி தெற்கு தெருவில் இருந்து காட்டு பெரிய ஏரிவரை 0/0 0/850 சாலை அமைக்கும் பணியினையும், அதனைத் தொடர்ந்துதேவாமங்கலம் ஊராட்சியில் ரூ.53.95 இலட்சம் மதிப்பீட்டில்முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேவாமங்கலம் காந்திநகர்0/01/600சாலைஅமைக்கும் பணியினையும், பின்னர், தழுதாழைமேடு ஊராட்சியில் ரூ.34.05 இலட்சம் மதிப்பீட்டில்முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்தழுதாழைமேடுகாலனி வாணதிரையான்பட்டிணம்0/01/0சாலைஅமைக்கும் பணியினையும், அதனைத் தொடர்ந்து பிள்ளைப்பாளையம் கிராமத்தில் ரூ.70.73 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின்கிராமசாலைமேம்பாட்டுத்திட்டத்தின்கீழ்பிள்ளைப்பாளையம்கொல்லாபுரம் ரேஷன் கடை வரை 0/0 1/200 சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்துபணிகளைதரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவில் முடித்திடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்குஅறிவுறுத்தினார்.

பின்னர், ஆமணக்கந்தோண்டி ஊராட்சியில் ரூ.30.50இலட்சம்மதிப்பீட்டில்முதலமைச்சரின்கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருச்சி சிதம்பரம் சாலை முதல் ஆமணக்கந்தோண்டி 0/0 0/900 சாலை அமைக்கும் பணியினையும், அதனைத் தொடர்ந்து இடைக்கட்டு கிராமத்தில்ரூ.225இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி சிதம்பரம் சாலையிலிருந்து இடைக்கட்டு செல்லும் சாலையில் பாலம் கட்டும் பணியினையும்,பின்னர்முத்துசேர்வாமடம் ஊராட்சியில் ரூ.110.85 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின்கிராமசாலைமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முத்துசேர்வாமடம் கோழிகொண்டான் 0/0 1/800 சாலை அமைக்கும்பணியினையும், அதனைத் தொடர்ந்து மீன்சுருட்டி ஊராட்சியில் ரூ.74.42இலட்சம்மதிப்பீட்டில்மீன்சுருட்டி அரசுஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் நான்கு வகுப்பறை கட்டடம்மற்றும்30மீட்டர் சுற்றுச்சுவர் கட்டும் பணியினையும், தொடர்ந்து மீன்சுருட்டி வடக்குத் தெருவில் 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் ரூ.3.30 இலட்சம்மதிப்பீட்டில்வடிகால்அமைத்தல்பணியினையும், தொடர்ந்து ரூ.3.20 மதிப்பீட்டில்பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், வரதராஜன்பேட்டை தென்னூரில் ரூ.145 இலட்சம் மதிப்பீட்டில் வரதராஜன்பேட்டை தென்னூர் சாலை கி.மீ 0/0 1/0வரைஅகலப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்தல் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமாகவும்,விரைவாகவும்முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக்கொண்டுவரவேண்டும்.

இவ்வாறு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குஅறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்இலக்குவன்,வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர்,கழக சட்டத் திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஒன்றியச் செயலாளர்கள் இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர்அணிஅமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன்,பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான்,மாவட்டமாணவரணிஅமைப்பாளர்எஸ்.ஈ ஆர்.இராமராஜன், மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அந்தோணிசாமி, மாவட்ட மீனவரணி அமைப்பாளர் எம்.ஜி.இராஜேந்திரன், பேரூர்க் கழகச் செயலாளர் அல்போன்ஸ், வட்டாரவளர்ச்சிஅலுவலர்கள், ஊராட்சிமன்றத்தலைவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.க. இளைஞரணி செயலாளர் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க காரைக்கால் வடக்கு தொகுதி காரைக்கால் மேடு பகுதியில் இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்வு நடைபெற்றது. காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜிம் எம்.எல்.ஏ. தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.நாக தியாகராஜன் எம்.எல்.ஏ. முன்னிலையில் காரைக்கால் இளைஞர் அணியின் அமைப்பாளர் ஐ.முஹம்மது ரிஃபாஸ் முன்னிலையிலும் காரைக்கால் இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் வி.வெற்றிச்செல்வன் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் தங்களை திமுக இளைஞர் அணியில் ஆர்வமாக இணைத்துக் கொண்டனர். மேலும் இந்த நிகழ்வில் மாநில மீனவர் அணி அமைப்பாளர் வீரதாஸ், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.சுரேஷ் ரூபன், ஏ.ராம் பிரசாத், வடக்கு தொகுதியின் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், ஆனந்தம் மயில், பாலமுத்து ஆகியோரும் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.